(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 113.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 நவம்பர் 28, வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

---

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ தேவானந்த சுரவீர

கௌரவ சந்தன சூரியஆரச்சி

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

“கௌரவ உறுப்பினர்களே !

தற்போது நாட்டில் நிலவும் அவசர அனர்த்த நிலையினை கவனத்திற் கொண்டதன் பின்னர், 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்தின்போது, இன்றைய தினம் வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தை நடத்தாமல் இருப்பதற்கும், 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆம் திகதி, அதாவது நாளைய தினமும் பாராளுமன்ற அமர்வை நடத்தாமலிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக 2026 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட குழுநிலை நிகழ்ச்சிநிரலில்:

- பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு
- இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

ஆகிய அமைச்சுகளின் செலவினத் தலைப்புகளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவிருந்த திகதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கிணங்க மாற்றப்பட்ட திகதிகள் தொடர்பாக இவ்வுயரிய சபைக்கு அறியத்தர விரும்புகிறேன்:

- 2025 நவெம்பர் மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவிருந்த இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செலவினத் தலைப்புகளை 2025 திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.30 மணி தொடக்கம் பி.ப. 6.00 மணி வரையும் (நிறைவேற்றல் பி.ப.6.00 மணி), புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செலவினத் தலைப்புகள் அன்றைய தினமே பி.ப. 6.00 மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணி வரையும் (நிறைவேற்றல் நள்ளிரவு 12.00 மணிக்கு): மற்றும்
- வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செலவினத் தலைப்பு 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணி தொடக்கம் பி.ப. 6.00 மணி வரை (நிறைவேற்றல் பி.ப. 6.00 மணிக்கு), நவெம்பர் மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செலவினத் தலைப்பு மு.ப. 6.00 மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணி வரை (அங்கீகரித்தல் நள்ளிரவு

12.00 மணிக்கு):

விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதை இவ்வுயரிய சபைக்கு அறியத்தருகிறேன். ''

**II**

''கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ அவர்கள் 2025 நவம்பர் மாதம் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டுவரப்படலாம்.''

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 59 ஆம், 63 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142(2) ஆம் பிரிவின் (ப) என்னும் பந்தியின் கீழ் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 04 ஆம் திகதிய 2452/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவுகள் 6 (ஆ), (இ) மற்றும் (ஒ), 16 மற்றும் 31 என்பவற்றுடனும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(3) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்துடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் தொடர்பிலான அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. பாராளுமன்ற அமர்வு (இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் மற்றும் 2025 நவம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 9.30 மணி வரை இருக்குமாக. மு.ப. 9.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அமர்வு (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75(2) இன் ஏற்பாடுகளினாலும் மற்றும் 2025 நவம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 'ஒதுக்கீட்டுச்' சட்டமூலம் (2026) இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2025 டிசம்பர் 01 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய

நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை இருக்குமாக. நள்ளிரவு 12.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் தொழிற்படுமாக. நள்ளிரவு 12.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வு (இல. 3):** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2025 டிசம்பர் 01 ஆம் திகதி, திங்கட்கிழமை மு.ப. 9.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— பொதுத் தனிசு ஒருங்கிணைத்தல் குழுவின் விதப்புரை மீது 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவுகள் 6(ஆ), (இ) மற்றும் (ஒ), 16 மற்றும் 31 என்பவற்றுடனும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(3) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்துடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2025 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 2459/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு:** "இப் பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம், மு.ப. 9.24 மணிக்கு சபாநாயகரால் இன்றையத் தினச் சபைத் தீர்மானத்திற்கிணங்க, 2025 டிசெம்பர் 01 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 9.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.